

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2023) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் பொதுப்பணி துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2023) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களின் மகள் பிரதிக்ஷா ஜெ.ஆர். நவமணி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அன்புமணி ராமதாஸ், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், செல்வி ஜோதிமணி, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

### மதுரை – அலங்காநல்லூர் அருகே

# பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு அரங்க கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

மதுரை, ஜூலை 9-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி உருவாக்கப்பட்டு வரும் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு அரங்கம் கட்டுமான பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் கீழ்கண்டவாறு தெரிவித்தார்.

அதன் விபரம் வருமாறு:-

முதல்வர் அவர்கள் தென்னகப் பகுதியில் தமிழர்களின் அடையாளமாக இருக்கிற ஜல்லிக்கட்டுக்கு அரங்கம் அமைப்பது குறித்து சட்டமன்றத்தில் அறிவித்து மதுரை அலங்காநல்லூர் அருகில் கீழக்கரை பகுதியில் அரசுக்கு சொந்தமான 66 ஏக்கரில் 44.6கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்கியது.

இடம் 77683 ச.அ பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் போடும்போது 17.12.2023க்குள் முடிக்க திட்டமிட்டுள்ளது. பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு 4முறை வந்துள்ளேன் 35சதவீத பணிகள் நிறைவுபெற்றுள்ளது.

பொதுப்பணித்துறை மூலம் தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் உடன் இருந்து ஆய்வு செய்து வருகின்றனர். அதன்படி நுழைவு வாயில், காளைகள் வரும் பகுதி, செயற்கை நீரூற்றுகள், காளைகள் வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு என 50000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர்தொட்டி, காளை உரிமையாளர்கள் ஓய்விற்கு இடம் அமைக்கப்படுகிறது. மேலும் மனிதர்களுக்கு மருத்துவமும், காளைகளுக்கு கால்நடை மருத்துவமும் செய்ய இடங்கள் அமைக்க முடிவு செய்து அமைக்கப்படுகிறது.

முதல்வர் அலங்காநல்லூர் பகுதியில் இருந்து மைதானம் வர குறுகிய சாலையாக இருப்பதால் புதிய அகலமான சாலை அமைக்க 22கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். அதற்கான டெண்டர் ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. விரைவில் நிலம் கையகப்படுத்தும் பணி முன்னுரிமை கொடுத்து பணிகள் முடியும் என்றார்.


அ.தி.மு.க.வினர் பாரம்பரிய ஜல்லிக்கட்டு மாற்றப்படும் என்கிறார்களே என செய்தியாளர்கள் கேட்ட போது, எதிர்க்கட்சி ஆளும் கட்சியைச் செம்மைப்படுத்துவதாக இருக்க வேண்டும் ஆளும் கட்சி தவறு என்றால் அதனை சுட்டிக் காட்டினால் சரி, ஆனால் இவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு மக்களிடத்தில் பீதியை உருவாக்கி வருகிறார்கள். பாரம்பரியமாக நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டு விழாக்கள் அந்தந்த பகுதியிலேயே தான் நடைபெறும், அதுபோல் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும் என்றார். மக்கள் வீர விளையாட்டு முக்கியம் அடையாளப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதால் அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள் மக்களிடம் வரவேற்பு உள்ளது அரசு மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணியாற்றிவருகிறது என்றார்.

கலைஞர் பேனா சின்னம் தொடர்பாக கேட்ட போது முழுமையாக தேசிய கடலோர ஒழுங்கு முறை ஆணையம் அனுமதி வழங்கி விட்டது. உச்சநீதி மன்றத்தில் வழக்கு வருகிறது மக்கள் உணர்வுகளைப் புரிந்து செயல்படும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதன் படி செயல்படுவார் என்றார்.

அமைச்சர் ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் சங்கீதா, பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர்கள் சத்தியமூர்த்தி, ரகுநாத் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

# மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்தை முறியடிக்க வேண்டும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை



சென்னை, ஜூலை 9-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா நேற்று முன்தினம் ஜூலை 7 ஆம் தேதி சட்டமன்றத்தில் வரவு செலவு திட்ட அறிக்கையை தாக்கல் செய்தார். அப்போது அவர், "மேகேதாட்டு அணை கட்ட ஒன்றிய அரசிடம் தேவையான ஒப்புதல் பெற துரித நடவடிக்கை எடுக்கப்படும். முதல் திட்ட அறிக்கை, சுற்றுச்சூழல் ஒப்புதல் பெற ஒன்றிய அரசிடம் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அணைக்கு நிலம் கையகப்படுத்துவதே அரசின் முதன்மைப் பணி என்றும் கூறியுள்ளார். மேலும் மேகதாது அணைக்கு நிலம் கொடுக்கும் மக்களுக்கு மாற்று இடத்தில் நிலம் வழங்கப்படும்" என்றும் முதலமைச்சர் சித்தராமையா அறிவித்துள்ளார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றம்,16.02.2018 இல் வழங்கிய தீர்ப்பிலும், காவிரியின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு கர்நாடக மாநிலத்திற்கு எந்த உரிமையும் இல்லை. தமிழ்நாடு அரசின் ஒப்புதல் பெறாமல் எந்தக் கட்டுமானமும் மேற்கொள்ளக் கூடாது என்று தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது.

2007, பிப்ரவரி 5 ஆம் தேதி நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பில், தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் 192 டி.எம்.சி தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த 192 டி.எம்.சி. தண்ணீரை மாத வாரியாக எவ்வளவு பிரித்தளிக்க வேண்டும் என்றும் நடுவர் மன்றம் வரையறுத்தது. ஜூன் மாதத்தில் 10 டி.எம்.சி., ஜூலையில் 34 டி.எம்.சி., ஆகஸ்ட்டில் 50 டி.எம்.சி., செப்டம்பரில் 40 டி.எம்.சி., அக்டோபரில் 22 டி.எம்.சி., நவம்பரில் 15 டி.எம்.சி., டிசம்பரில் 8 டி.எம்.சி., ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் தலா 2.5 டி.எம்.சி. என நீர்ப் பங்கீடு வரையறுக்கப்பட்டது.

ஆனால் காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்புக்கு எதிரான மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் பிப்ரவரி 16, 2018 இல் அளித்த தீர்ப்பில், கர்நாடகா, தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரின் அளவை 177.25 டி.எம்.சி. ஆக குறைத்து உத்தரவிட்டுள்ளது.

நடுவர் மன்றம் வழிகாட்டுதல் மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட காவிரி மேலாண்மை ஆணையம், தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நீரை காவிரியில் திறந்துவிட கர்நாடக மாநிலத்திற்கு உத்தரவிட முடியாத கையறு நிலையில் தான் இயங்கி வருகிறது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி ஜூன் மாதம் 9.19 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்கு திறக்கப்பட வேண்டும். ஆனால், 2.83 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு ஜூன் மாதத்திற்கான 6.357 டி.எம்.சி. தண்ணீரை இன்னும் கர்நாடகா தரவேண்டியுள்ளது.

காவிரியிலிருந்து ஜூலையில் 31.24 டிஎம்சியும், ஆகஸ்டில் 45.95 டி.எம்.சி.யும் கர்நாடகா தர வேண்டும். ஜூன், ஜூலை மாதங்களுக்கான தண்ணீரை பெற்றுத்தந்தால் மட்டுமே குறுவை சாகுபடி செய்யமுடியும் என்று காவிரிப் படுகை விவசாயிகள் கவலையுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் மேகேதாட்டு அணை கட்டப்படுமானால், காவிரிப் படுகைப் பகுதிகள் பாலைவனம் ஆகி விடும். எனவே ஒன்றிய அரசு மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்திற்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கக் கூடாது.

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை விரைவுப் படுத்தி, கர்நாடகா மேகேதாட்டு அணை கட்டும் திட்டத்தை முறியடிக்க வேண்டும்.

இவ்வாறு வைகோ தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருநெல்வேலி கிழக்கு

# மாவட்ட அணிகளின் ஆலோசனைக்கூட்டம்!

## இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், அன்புதளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட சார்பு அணிகளின் சார்பில் நிகழ்ச்சிகள் நடத்துவது சம்பந்தமாக ஆலோசனைக்கூட்டம் பாளை, மகாராஜநகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து. பின்வரும் அட்டவனையில் உள்ளவாறு நடைபெற உள்ளது.

**தேதி, நேரம், அணிகள் விவரம் வருமாறு:-**

10.07.23 திங்கள் , காலை 10 மணி – இளைஞர் அணி, 10.07.23 திங்கள், காலை 11 மணி – மகளிர் அணி, 10.07.23 திங்கள், நண்பகல் 12 மணி – மகளிர் தொண்டர் அணி, 10.07.23 திங்கள், நண்பகல் 12.30 மணி – கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி, 11.07.23 செவ்வாய், காலை 10 மணி – நெசவாளர் அணி , 11.07.23 செவ்வாய், காலை 11 மணி – ஆதி திராவிடர் நல அணி, 11.07.23 செவ்வாய், நண்பகல் 12 மணி – அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, 12.07.23 புதன், காலை 10 மணி – தகவல் தொழில்நுட்ப அணி, 12.07.23 புதன், காலை 11 மணி – வர்த்தகர் அணி, 12.07.23 புதன், நண்பகல் 12 மணி – பொறியாளர் அணி, 12.07.23 புதன், நண்பகல் 12.30 மணி – தொழிலாளர் அணி

சம்பந்தப்பட்ட மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் அணி நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**இரா.ஆவுடையப்பன்**
செயலாளர் , திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகர அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்புமனு தாக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரக் கழக அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலு (எ) சுப்பையா மறைவெய்திய காரணத்தால்;

திருநெல்வேலி மாநகர அவைத்தலைவர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் **தலைமைக் கழகத்தில் 2023 ஜூலை 12 (புதன்கிழமை) அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

**வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள் – பகுதிக் கழக நிர்வாகிகள் – பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.**

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**அவைத் தலைவர் பொறுப்பு**

**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம் ரூ.5000/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/- கட்டணம் செலுத்தி

தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 8.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ.இராமலிங்கம், அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால்;

திருப்பூர் தெற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2023, **ஜூலை 12 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 8.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1184/2023

**குறுகிய கால மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2022-23**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 10 & 11ல் உள்ள 15 எண்ணிக்கையிலான உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி சிப்பம் 9 மற்றும் 20 (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme -2022-23 | 9 மற்றும் 20 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.87.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.97.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **20.07.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**
செ.ம.தொ.இ / 3524 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1903/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மறு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2023-24**

| பணியின் விவரம் | சிப்பங்களின் எண்ணிக்கை | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST சேர்த்து (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 8 & 9ல் உள்ள 22 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2023-24 | 1 | 169.00 | 169000 | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **20.07.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**
செ.ம.தொ.இ / 3525 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/3464/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023 - 24)**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில் | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| மண்டலம் – 6 & 7 உள்ள 10 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24) | பணியின் மதிப்பு ரூ.89.00 இலட்சம் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **20.07.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**
செ.ம.தொ.இ / 3522 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/3463/2023

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023 - 24)**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக GST 18% சேர்த்து ரூ.இலட்சங்களில் | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|
| மண்டலம் 3, 4, 6 & 9ல் உள்ள 32 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023 - 24) | பணியின் மதிப்பு ரூ.250.00 இலட்சம் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **20.07.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**
செ.ம.தொ.இ / 3523 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# குழந்தை தமிழரசன்

### ஜூலை 9 (2020)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**